**கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயப்பொருளின் வலியுறுத்தல்**

எனது அபிப்பிராயத்திற்கு முனைப்பழிவு இல்லாமல்இ நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் உள்ள தொடர்ந்து இயங்குதல் எடுகோள்கள் குறித்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 2.5 க்கு நான் கவனத்தை ஈர்க்கிறேன். மேலே உள்ள குறிப்பில் கூறப்பட்டுள்ள படிஇ கம்பனியின் முகாமையானது கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினுடைய தொடர்ந்து இயங்குவதற்கான திறனை மதிப்பிட்டு இருக்கிறது மற்றும் எதிர்காலத்தில் வணிகத்தில் தொடர்வதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாக திருப்தி அடைந்துள்ளது. மேலும் நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் திறனைப் பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவேஇ நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

எவ்வாறாயினும்இ ஹெலன்கோ ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் இயக்குனர் சபை 2015 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டையில் ஹோட்டலை நிர்மாணிக்கும் திட்டத்தை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இதன் விளைவாகஇ திட்டத்தினுடைய ஹோட்டல் கட்டுமான நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துள்ளன. மேலும்இ கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டில் (தாய் நிறுவனம்) பங்கு வைத்திருக்கும் விகிதாசாரத்தில் கம்பனியின் பங்குகளை அதன் பங்குதாரர்களுக்கு மாற்றுவதற்கு பொது முயற்சிகள் மேம்பாட்டு அமைச்சு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. 01 ஆகஸ்ட் 2017 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின்படி இந்த திட்டம் அறிக்கையிடும் திகதி வரை செயல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்தில் கம்பனியைக் கலைக்க கம்பனியின் முகாமைத்துவம் முடிவு செய்திருக்கவில்லை. மற்றும் கம்பனியின் முகாமைத்துவமானது முன்னோக்கிச் செல்லும் வழியில் தேவையான வழிகாட்டுதல்களை தொடர்புடைய அமைச்சிடம் இருந்து நாடுகிறது. எனவேஇ ஹெலன்கோ ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

மேலும்இ சினோலங்கா ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் முகாமைத்துவமானது கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப் பற்றிய மதிப்பீட்டை மேற்க்கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வணிகத்தை தொடர்வதற்கான வளம் தன்னிடம் இருப்பதாக திருப்தியடைந்துள்ளது. மேலும் கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப்பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் நிர்வாகம் அறிந்திருக்கவில்லை. மேலும் 2020 ஆம் ஆண்டு யூலை 8 ஆம் திகதி இடம்பெற்ற

அமைச்சரவைக் கூட்டத்தில் கிராண்ட் ஹயாட் கொழும்பு திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதன்படிஇ திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 2020 ஆம் ஆண்டில் மீண்டும் தொடங்கப்பட்டன. மேலும்இ 03 ஜனவரி 2022 திகதியிடப்பட்ட அமைச்சரவையின் ஒப்புதலின் அடிப்படையில்இ கம்பனியின் முகாமைத்துவம் 175 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டத்திற்கான நிதியை 25 மில்லியன் அமெரிக்க டொலர் உரிமை மூலமும் 150 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் மூலதனம் மூலமும் ஏற்பாடு செய்ய உழைத்து வருகிறது.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போதுஇ கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல்இ தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள்இ செலவினங்கள்இ சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை.

பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல்இ அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்இ தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும்இ தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால்இ அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில்இ நதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்இ எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல்இ கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்புஇ முறைமைகள்இ நடைமுறைகள்இ ஏடுகள்இ பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள்இ நடைமுறைகள்இ புத்தகங்கள்இ பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்இ

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்இ

- கம்பனி அதன் அதிகாரங்கள்இ தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்இ மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 1.5 நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஹெலன்கோ ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் (துணைக்கம்பனி) இயக்குனர் சபையானது ஹம்பாந்தோட்டையில் கட்டுமானம் செய்யப்படுகின்ற ஹோட்டலினுடைய திட்டத்தை நிறுத்துவதற்கு தீர்மானித்திருக்கிறது. அதன் விளைவாக ஹோட்டலினுடைய கட்டுமானம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. மேலும் பொது நிர்வாக மேம்பாட்டு அமைச்சகம் 01 ஆகஸ்ட் 2017 தேதியிடப்பட்ட அமைச்சரவை முடிவு இல 17∴1613∴733∴029 பிரகாரம் கம்பனியினுடைய பங்குகளை கம்பனியில் அவர்களின் பங்குகள் உள்ள விகிதத்தில் அதன் பங்குதாரர்களுக்கு மாற்றுவதற்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது. | நிறுவனத்தின் உரிமையை மறுசீரமைக்க 2017 ஆம் ஆண்டில் அமைச்சர்களின் அமைச்சரவை முடிவு அறிக்கையிடல் திகதியில் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை.<br><br>எவ்வாறாயினும் நிறுவனத்தின் தற்போதைய நிர்வாகமானது திட்டம் மற்றும் கம்பனியை முன்னெடுத்துச் செல்லும் வழியில் தொடர்புடைய அமைச்சகத்திடமிருந்து தேவையான உத்தரவுகளை பெறுகின்றது.<br><br>1 செப்டம்பர் 2022 அன்று பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு இரண்டு சட்டக் கருத்தை நாங்கள் சமர்ப்பித்த நிலையில்இ முன்னோக்கிச் செல்லும் வழிக்கான உத்தரவுகளை கோரினோம். | முகாமைத்துவமானது திட்டத்தின் எதிர்கால வழிகாட்டுதலுக்கு உரிய அதிகாரியுடன் ஒருங்கிணைக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

ஹெலன்கோ ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தால் மாற்றப்பட்ட பங்குகள் அறிக்கையிடும் தேதியின் படி செயல்பாட்டில் உள்ள ஒரு சுயாதீன மதிப்பீட்டின் அடிப்படையில் இருக்க வேண்டும். எனவே கம்பனி எதிர்காலத்தில் கம்பனியை கலைக்க முடிவு செய்திருக்கவில்லை. எனவே நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும்.

எங்களின் கடிதத்தின் அடிப்படையில் முன்னோக்கிச் செல்லும் வழிமுறைகளுக்காக காத்திருக்கிறோம்.

சினோலங்கா ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் (துணைக்கம்பனி) முகாமைத்துவமானது கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப் பற்றிய மதிப்பீட்டை மேற்க்கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வணிகத்தை தொடர்வதற்கான வளம் தன்னிடம் இருப்பதாக திருப்தியடைந்துள்ளது. மேலும் கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப்பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் நிர்வாகம் அறிந்திருக்கவில்லை. மேலும் 2020 ஆம் ஆண்டு யூலை 8 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கிராண்ட் ஹயாட் கொழும்பு திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி 2020 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டு அறிக்கை திகதியில் நடைபெற்று வருகின்றது.

இருப்பினும் திட்டத்தைத் தொடர அரசாங்கம் மற்றும் இறுதி தாய் நிறுவனத்தின் ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்கள் தேவை.

உரிமை முதலீடு ரூபா.6 பில்லியன் இது முழு விலகல் முடிவு எட்டப்படும் வரை ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசன் லிமிட்டட்டிற்கு நிதியை உட்செலுத்துவதற்கு அமைச்சரவை ஆணை உத்தரவுகள் கொடுக்கப்பட்டது. (சுநக: 20.∵.1042.∵.204.∵.050-1 08 யூலை 2020 திகதியிடப்பட்டது). அதன்படிஇ தேவையான நிதி மீதிகள் முறையான நிதி அளிப்புத் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் வரை 1 வது தவணையாக மே 2021 உரிமை வழங்கல் மூலம் திட்டத்தின் கட்டுமானத்தைத் தொடர ரூபா.2 பில்லியன் நிதியை ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசன் லிமிட்டட் உட்செலுத்தி உள்ளது.

2021 யூன் 10 ஆம் திகதி ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசன் லிமிட்டட்டிடமிருந்து 2 வது தவணையாக ரூபா.2 பில்லியன் எதிர்பார்க்கப்பட்டது. இது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 31(1) இன் கீழ் செயற்படும் ஒருமித்த பங்குதாரர் ஒப்பந்தத்தின் படி குறிப்பாக ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசன் லிமிட்டட்டிற்கு ஆதரவாக பங்குளை வழங்க அனைத்து பங்குதாரர்களாலும் கையொப்பமிடப்பட்டு மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்டதுஇ இருப்பினும் இன்று வரை பரிசீலனை நிலுவையில் உள்ளது. அமைச்சரவை ஆணையிட்டது போல இன் நிதியுதவி ரூபா.6 பில்லியனை எதிர்பார்த்து இந்த திட்டம் திட்டமிடப்பட்டதுஇ எவ்வாறாயினும் மேலும் இலங்கை

முகாமைத்துவமானது திட்டத்தின் எதிர்கால வழிகாட்டுதலுக்கு உரிய அதிகாரியுடன் ஒருங்கிணைக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ரூபா.4 பில்லியன் இன்னும் நிலுவையில் இருந்து கொண்டிருக்கின்றது இது திட்டத்தை பாதித்திருக்கிறதுஇ அவர்களின் ஒழுங்குமறை உடன்படிக்கைகள் காரணமாக திட்டத்திற்கு நிதியளிப்பதில் தடைகள் இருப்பதாக (பிந்திய கணக்காய்வு 31 டிசம்பர் 2021) எங்களுக்கு இப்போது ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசன் லிமிட்டட் தெரிவித்துள்ளது.

திட்டத்தை முழுமையாக முடிப்பதற்கு பங்கு மற்றும் கடன் மூலம் 175 மில்லியன் அமெரிக்க டொலர் உட்செலுத்துவதற்கான திட்டத்தில் கம்பனி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மேலும் 01 ஜனவரி 2022 திகதியிடப்பட்ட குறிப்பு: 21∴2278∴306∴100 அமைச்சரவையின் ஒப்புதலின் அடிப்படையில்இ கம்பனியின் முகாமைத்துவம் 175 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டத்திற்கான நிதியை 25 மில்லியன் அமெரிக்க டொலர் உரிமை மூலமும் 150 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் மூலதனம் மூலமும் ஏற்பாடு செய்ய உழைத்து வருகிறது.

போட்டித் தன்மையான ஏலச் செயன்முறைக்குப் பிறகுஇ நேவறலெ ளுழடரவழைளெ – கனடா மற்றும் டு.யு. ஊயிவையட ஐஉெ. (டுயுஊ) – கனடா உடைய முதலீட்டு வசதியளிக்கும் கம்பனிஇ 25 மில்லியன் அமெரிக்க டொலர் உரிமை மூலதனம் மற்றும் 150 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் மூலதனம் ஆகிய வழிகள் மூலம் 175 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு கொழும்பு கிராாண்ட் ஹயாட் மீதி நிர்மாணப் பணிகளுக்கு பகுதி நிதியளிப்பின் ஏற்பாட்டின் பேரில் ஆணையிடப்பட்டது. மேற்படி கம்பனியின் அதிகாரிகள் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்து தங்களின் உரிய விடாமுயற்சி நடவடிக்கையில்

ஈடுபட்டனர். இலங்கையில் தற்போது நிலவும் பாதகமான பொருளாதார சூழல் மற்றும் நாட்டில் நிலவும் பாதகமான சர்வதேச மதிப்பீடுகள் மற்றும் இறையாண்மைக் கடன் நெருக்கடி காரணமாக தமது முதலீட்டுடன் தொடர்புடைய ஆபத்துக்கள் தொடர்பில் தாங்கள் மிகவும் கவலை அடைவதாக அவர்கள் தெரிவித்தனர். மேலும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியின் “முன் கூட்டிய கடனைத் திருப்பிச் செலுத்தாத நிலை” அறிவிப்பின் அடிப்படையில்இ முன்னோக்கிச் செல்லும் போது வட்டி வீதம் போன்ற ஆரம்பத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகளுடன் வேலை செய்ய முடியாது என்று அவர்கள் கூறினர்இ மேலதிகமாக நிறுவன உத்தரவாதம் மற்றும் நிதி வழங்கல் நடைமுறை (ஒரே நேரத்தில் 175 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவில்லை மற்றும் பல). எவ்வாறாயினும் காலதாமதத்தால் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டதுஇ இதன் மூலம் மூலதனத்தைத் திரட்ட மேலும் போட்டித் தன்மையான ஏல செயன்முறை தொடங்கப்பட்டது அதுவும் செயல்படத் தவறியது.

மேற்கூறிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு திட்டத்தின் முன்னோக்கி செல்லும் வழியில் நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் உத்தரவுகளுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

மறு நிகழ்வு செலவுகளை நிர்வகிப்பதற்ான திட்டமானது இன்று வரை வரையறுக்கப்பட்ட நிதியைக் கொண்டுள்ளதுஇ முடிக்கப்பட்ட வேலைகளின் பரிபாலிப்பு மற்றும் பராமரிப்பு மற்றும் டிசம்பர் 2022 வரையான ஊதியம்இ தொடர்புடைய அமைச்சிடமிம் இருந்து 100மூ விலக்கில் உத்தரவைப் பெற்றுக் கொள்ள நாங்கள் பல கோரிக்கைகளைச் விடுத்துள்ளோம்.

13 ஒக்டோபர் 2022 திகதியிடப்பட்ட

பணிப்பாளர் சபை பத்திரக் குறிப்பு: ளூரேர்ளு.'.2022.'.21 மற்றும் 20 ஒக்டோபர் 2022 திகதியிடப்பட்ட தொடர்ந்த பணிப்பாளர் சபை நிமிடக் குறிப்பு 2022-14 இன் படி உருப்படி 5இ கிராண்ட் ஹயாட் திட்ட தற்போதைய நிலையை விரிவாக விவாதிக்கின்றது. தற்போதைய நெருக்கடியான பொருளாதாரப் பின்னணிஇ மோசமடைந்து வரும் பணப்பழக்க நிலமைஇ ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசன் லிமிட்டட் மூலம் கிடைக்காத நிதி மற்றும் அமைச்சரவை அங்கிகரிக்கப்பட்ட கடன்.'.மூலதன நிதியளிப்பு விருப்பத்தேர்வுகள் வரப்போவதில்லை என்பவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ள பணிப்பாளர் சபை ஒருமனதாக முடிவெடுத்துள்ளது. தீர்க்கப்படாத பொறுப்புக்களில் இருந்து கம்பனிக்கு கூடுதல் செலவைத் தவிர்க்க வெகு விரைவில் 100மூ விலக்குடன் நடவடிக்கையைத் தொடர அமைச்சரவையின் ஒப்புதலை நாடவும்.

## 2. நிதி மீளாய்வு

கம்பனியின் முக்கிய செயற்பாடு ஓய்வுத்துறையின் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் துணைநிறுவனங்களான சினோலங்கா ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் ஹெலன்கோ ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் ஆகியவற்றை பிடியில் வைத்திருக்கும் நிறுவனம் போன்று கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் ஆகும்.

சினோலங்கா ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் முக்கிய செயற்பாடு விருந்தோம்பல் வர்த்தகத்தில் ஈடுபடுவது மற்றும் தற்போது கட்டுமானத்திலுள்ள கொழும்பு கிராண்ட் ஹயாட்டை சொந்தமாக வைத்திருப்பதாகும்.

ஹெலன்கோ ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் முக்கிய செயற்பாடு விருந்தோம்பல் வர்த்தகத்தில் ஈடுபடுவது மற்றும் ஹம்பாந்தோட்டை ஹயாட் ரீஜென்சி ஹோட்டலை சொந்தமாக வைத்திருப்பதாகும். எவ்வாறாயினும் ஹெலன்கோ ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் இயக்குனர் சபை ஹம்பாந்தோட்டையில் நிர்மானிக்கும் திட்டத்தை நிறுத்துவதற்கு 2015 ஆம் ஆண்டு தீர்மானித்திருந்தது. தற்போதைய இயக்குனர் சபை ஹெலன்கோ ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டை முன்னொக்கிச் செல்லும் வகையில் தேவையான உத்தரவுகளை நிதியமைச்சிடம் நாடுகின்றது.

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா.5இ008இ966 இலாபமாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா.4இ076இ470ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா.932இ436 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. நிதி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான வருமானம் இ நிர்வாக செலவினங்கள் மற்றும் தேறிய இலாபம் ∴ (நட்டம்) என்பன பின்வருமாறு.

| **ஆண்டு** | **2021** | **2020** | **2019** | **2018** | **2017** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| நிதி வருமானம் | 16,009,682 | 1,225,668 | 9,435,080 | 25,564,060 | 38,088,317 |
| நிர்வாக செலவினங்கள் | (9,411,210) | (6,540,697) | (9,931,740) | (8,725,269) | (7,869,756) |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் / (நட்டம்) | 5,008,966 | (4,076,470) | (255,178) | 18,477,650 | 165,373,105 |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்வுக்கு கிடைத்த நிதி அறிக்கைகள் மற்றும் தகவல்களின் படி முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான சில முக்கிய விகிதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **விகிதங்கள்** | **2021** | **2020** | **2019** | **2018** | **2017** |
|---|---|---|---|---|---|
| நிதி வருமானத்தின் வளர்ச்சியின் வீதாசாரம்/ (குறைப்பு) | 1206% | (87%) | (63%) | (33%) | 170% |
| நிர்வாக செலவினங்களின் வளர்ச்சியின் வீதாசாரம்/ (குறைப்பு) | 44% | (34%) | 14% | 11% | (5%) |
| தேறிய இலாபத்தின் வளர்ச்சியின் வீதாசாரம;/ (குறைப்பு) | (223%) | 1,498% | (101%) | (89%) | 161% |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 பெருநிறுவனத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பீஈடி.⁚.12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1 இற்கு அமைய நிறுவனமானது பெருநிறுவனத் திட்டத்தை தயாரித்து இருக்கவில்லை. | திட்டத்தின் கட்டுமானத்தை முடிக்க கம்பனிக்கு தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் செயற்றிட்ட நிறைவுத்திட்டம் நடைமுறையிலுள்ளது இது தேவைக்கேற்ப பெருநிறுவனத் திட்டமாக நீடிக்கப்பட உள்ளது. | கம்பனி அதன் நோக்கங்களை அடைய ஒரு பெருநிறுவனத் திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும். |

### 3.2 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கான வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருந்திருக்கவில்லை. | திட்டத்தை முடிப்பது தொடர்பான செயல் திட்டம் உள்ளது. | கம்பனி அதன் வருடாந்த இலக்குகளை அடைய ஒரு செயல் திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும். |

### 3.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பீஈடி.⁚.12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 3.7.5 இற்கு அமைய செயற்பாடுகள் உண்மையாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக அமைப்பு முறைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்வது உள்ளக கணக்காய்வு முகாமையாளரின் பொறுப்பாகும். ஆனால் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளரின் பங்கு கொடுப்பனவுகளின் மீது முன் கணக்காய்வினை நடாத்துவதும் கொடுப்பனவு கைச்சாத்துக்களை உறுதிப்படுத்துவதற்கும் வரையறுக்கப்பட்டிருந்தது. | 2015 லிருந்து முறையாகப் பின்பற்றும் கொள்முதல் செயல்முறையின் மூலம் பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்திற்கு கால இடைவெளியில் உள்ளக கணக்காய்வு செயற்பாடு வெளிக்களம் செய்யப்பட்டது. அவர்கள் 30 யூன் 2018 வரை காலாண்டு அறிக்கைகளை கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர். 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கு அவர்களை பரிந்துரைக்கப்பட்டும் கட்டுமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதாலும் கோவிட்19 கட்டுப்பாடுகளாலும் உள்ளக கணக்காய்விற்கு அழைக்கப்படவில்லை.<br><br>2022 ஆம் ஆண்டிலிருந்து உள் கணக்காய்விற்கு வெளிக்களம் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.<br><br>உள்ளக கணக்காய்வு முகாமையாளர் மூலம் முக்கிய விடயங்கள் கணக்காய்வுக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. | பெருநிறுவன நோக்கங்களை அடைவதற்கான வினைத்திறனுள்ள முகாமைத்துவ கருவியாக கம்பனிக்கான உள்ளக கணக்காய்வின் வினைத்திறனான தொழிற்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். |

### 3.4 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி∴12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 7.4.1 இற்கு அமைய இந்தக் குழு ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது வழக்கமான அடிப்படையில் கூட வேண்டும். எவ்வாறாயினும் மதிப்பாய்வில் உள்ள நிதியாண்டில் ஒரு முறை மாத்திரமே கணக்காய்வுக் குழுக்கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. | பொது முடக்கம் காரணமாக கூட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் கணக்காய்வு குழுக் கூட்டங்களை வழக்கமான அடிப்படையில் நடத்த முடியவில்லை. 2022 ஆம் ஆண்டில் இதனை கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படும். | பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் படி கணக்காய்வுக் குழுவின் வினைத்திறனான செயற்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். |

### 3.5 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி∴12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.2 இற்கு அமைய மதிப்பாய்வில் உள்ள நிதியாண்டிற்கபன வருடாந்த பாதீட்டை நிறுவனம் தயாரித்திருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | கம்பனியின் செலவினங்களை முறையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு முகாமைத்துவத்தை செயல்படுத்துவதற்காக வினைத்திறனான பாதீட்டு கட்டுப்பாடு கம்பனியில் இருப்பதை சபை உறுதி செய்ய வேண்டும். |